# சார்பு நீதிமன்றம், திருவாரூர்

| | |
|---|---|
| வழக்கு எண் | அ.வ.எண்.121/2018 |

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் நாள் சனிக்கிழமை வா.சா.1 இன் வாக்குமூலம், 1872 ம் ஆண்டு இந்திய சாட்சி சட்டப்பிரிவு 44 விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திரு.மு. வீரணன், பி.எஸ்ஸி., எல்.எல்.எம்., திருவாரூர் சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சாட்சிய விசாரணை.

| | |
|---|---|
| பெயர் | மாரியம்மாள் |
| த/பெயர் | விஜயராகவன் |
| வயது | |
| மதம் | |
| கிராமம் | |
| வட்டம் | |
| மாவட்டம் | |
| தொழில் | |

வா.சா.1 சத்தியப்பிரமாணம் பெறப்பட்டு முதல்விசாரணை

நான் வாதி. நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது பிரமாண வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த 21/08/1959 தேதியில் என் கணவருக்கு முகைதீன் மரைக்காயர் என்பவர் எழுதிக்கொடுத்தகிரய ஒப்பந்தம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும். (மேற்படி ஆவணத்தை குறியீடு செய்வதில் பிரதிவாதி வழக்கறிஞர் ஆட்சேபைண தரிவிக்கிறார்) தாவா சொத்தை பொறுத்து என் கணவர் பெயரிலுள் பட்டா வா.சா.ஆ.2 ஆகும். தாவா சொத்துக்கு பக்கிரி மகன் அய்யாங்கு என்பவர் பெயரிலுள்ள மனை வரி தோராய பட்டா வா.சா.ஆ.3 ஆகும். என் கணவர் விஜயராகவன் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.4 ஆகும். விஜயராகவனின் வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.5 ஆகும். கடந்த 26/06/2018 தேதியில் நான்

பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகும். மேற்படிஅறிவிப்பை பிரதிவாதியும் அவரது தாயாரும் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள் (2 எண்ணிக்கை) வா.சா.ஆ.7 ஆகும். பிராதுபடி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.